**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 11

**அத்தியாயம்** : 1 (பகுதி -1)

**பாடம்** : **நுண்ணிய பொருளியல் ஓர் அறிமுகம்**

**தலைப்பு** : **பொருளியல் – பொருள் & தன்மைகள், நான்கு வரையறைகள், அடிப்படைக் கருத்துக்கள்**

**கற்றல் நோக்கங்கள்:**


1.பொருளியல் பாடம் பற்றிய அடிப்படை அறிவைப் பெறுதல்.

2.பொருளியலின் இயல்பையும் எல்லையையும் புரிந்து கொள்ளுதல்.

**துணைக் கருவிகள்:**

PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**பொருளியல் பற்றிய வரைபடம்**




AMPOORAJAN

**<u>கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:</u>**

"பொருளியல் எங்கும் நிறைந்தது; பொருளியலின் புரிதல் நல்ல முடிவுகளை எடுக்கவும் ஆனந்தமான வாழ்வைப் பெறவும் உதவும்" - டைலர் கோவன்

பொருளியல் என்றால் 'இல்லங்களில் நிர்வாகம்' என்று பொருள்படும்.

பொருளியலில் மிக முக்கியமான நான்கு வரையறைகள் எடுத்துரைக்கப்பட்டு அதன் இயல்புகள் விளக்கப்படுகின்றன. அவையாவன:

1.செல்வ இலக்கணம் - ஆடம் ஸ்மித்

2.நல இலக்கணம் - ஆல்ஃபிரட் மார்ஷல்

3.பற்றாக்குறை இலக்கணம் - இலயனல் ராபின்ஸ்



Downloaded From www.nagaicollege.com

4.வளர்ச்சி இலக்கணம் - சாமுவேல்சன்

**பாட வளர்ச்சி:**

**<u>பொருளியல் பாடப் பொருள்:</u>**

விருப்பங்கள் - முயற்சிகள் - உற்பத்தி - பகிர்வு மற்றும் பரிமாற்றம் நுகர்வு

பொருளியல் கலை மற்றும் அறிவியல் ஆகிய இரண்டோடு தொடர்புடையது.

**<u>பொருளியலின் அடிப்படை கருத்துக்கள்:</u>**

1.பண்டங்கள் மற்றும் பணிகள்

2.பயன்பாடு

3.விலை

4.அங்காடி

5.செலவு

6.வருவாய்

7.வருமானம்

## வலுவூட்டல்:

R.THALAMPOORAJAN

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை VIDEO GAMES, QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்

**செயல்பாடு/தொடர்பணி:**

**1. பொருளியல் வல்லுநர்களின் படங்களைச் சேகரிக்கச் செய்தல்.**
**2. வீட்டு உபயோகத்திற்குத் தேவையான பொருட்களின் விலைகளை அறியச் செய்தல்.**

**<u>மதிப்பீட்டு வினாக்கள்:</u>**

1.பொருளியல் என்றால் என்ன?

2.பண்டங்கள் என்றால் என்ன?

3.பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.

4.பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக.

5.பணிகளின் பல்வேறு இயல்புகளை விவரி.



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 11

**அத்தியாயம்** : 1 (பகுதி -2)

**பாடம்** : **நுண்ணிய பொருளியல் ஓர் அறிமுகம்**

**தலைப்பு** : **பொருளியல் முறைகள், கூறுகள், கோட்பாடுகள் மற்றும் விதிகள்**

**கற்றல் நோக்கங்கள்:**


பொருளியல் அதற்குரிய விதிகளை எவ்வாறு அணுகுகின்றது என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.

**துணைக் கருவிகள்:** வரைபடம், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.


**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

பகுத்தாய்வுக் கோட்பாடு - அனுமானம் - உற்று நோக்கல் - உறுதிப்படுத்துதல்

R.THALAMPOORAJAN




தொகுத்தாய்வுக் கோட்பாடு - உத்தேச அனுமானம் - அமைப்பு முறை - உற்று நோக்கல்.




இம்முறைகள் ஒவ்வொரு படிநிலைகளில் கீழ் விளக்கப்படும்.



Downloaded From www.nagaicollege.com

**பாட வளர்ச்சி:**

**<u>பொருளியலின் உட்பிரிவுகள்</u>:** 1.நுகர்வு 2.உற்பத்தி 3.பரிமாற்றம் 4.பகிர்வு 5.பொது நிதி

**<u>பொருளியலின் வகைகள்</u>:** நுண்ணியல் பொருளியல் மற்றும் பேரியல் பொருளியல் இவைகளின் வேறுபாடுகள் விளக்கப்படுகிறது.

**<u>பொருளியலில் அடிப்படை பிரச்சனைகள்</u>:**

1.என்ன உற்பத்தி செய்வது?


2.எவ்வாறு உற்பத்தி செய்வது?

3.யாருக்காக உற்பத்தி செய்வது?

**<u>உற்பத்தி வாய்ப்பு வளைகோடு</u>:**

ஏதேனும் இரு பொருள்களை எடுத்துக் கொண்டால் அவற்றில் எதை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வினாவிற்கு பதில் தரும் முறையே வடிவியல் சாதனம் மூலம் விளக்குவதே உற்பத்தி வாய்ப்பு வளைகோடு எனப்படும்.

**வரைபடம்:**



வரைபடம் 1.2.

DORAJAN

**<u>வரைபட விளக்கம்</u>:**

Xஅச்சு உணவின் அளவு

Yஅச்சு மோட்டார் வாகனத்தின் எண்ணிக்கை

P1 லிருந்து P6 உற்பத்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய வரைபாதை

P புள்ளி அடைய முடியா உற்பத்தி (பற்றாக்குறை வளங்கள்)

P7 புள்ளி அடைய முடியும் உற்பத்தி (ஒரே சமயத்தில் இரண்டு பொருட்களின் உற்பத்தியையும் அதிகரிக்க முடியும்).

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை VIDEO GAMES, QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.



Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net

**செயல்பாடு/தொடர்பணி:**

**1. <u>உற்பத்தி வாய்ப்பு வளைகோடு வரைபடம் வரைந்து வரச்</u> செய்தல்.**
**2. பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை அறியச் செய்தல்.**

**<u>மதிப்பீட்டு வினாக்கள்:</u>**

1. பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக.

2.இயல்புரை அறிவியலில் இலக்கணத்தை வரையறுக்க

3.பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை ஆராய்க.

4.உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகளை விவரி.

5.கொள் குறி வகை வினாக்கள்.

R.THALAMPOORAJAN
www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பாடக்குறிப்பு - பொருளியல்

**நாள்** :

**வகுப்பு** : 11

**அத்தியாயம்** : 2 (பகுதி -1)

**பாடம்** : நுகர்வுப் பகுப்பாய்வு

**தலைப்பு** : மனித விருப்பங்கள் - குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி -

**துணைக் கருவிகள்: வரைபடம்,** PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**கற்றல் நோக்கங்கள்:**

1.விலையில் மாற்றங்கள் நிகழும் போது நுகர்வோரின் போக்கினைப் புரிதல். 2.பண்டத்தை வாங்கும் மற்றும் நுகரும் நடத்தை பற்றி அறிந்து கொள்ளுதல்.

**ஆயத்தப்படுத்துதல்:**

நுகர்வு ஒரு முக்கியமான பொருளாதார நடவடிக்கை ஆகும்.

பொருளாதார அறிவியலின் தொடக்கமே நுகர்வு ஆகும். கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:

R.THALAMPOORAJAN

**பாட வளர்ச்சி:**

**மனித விருப்பங்களின் பண்புகள்:**

1.மனித விருப்பங்களின் பண்புகள் எண்ணற்றவை.

2.விருப்பங்கள் நிறைவேற்றக் கூடியவை.

3.விருப்பங்கள் மீளத் தோன்றுபவை.

| பண்டங்களின் வகைகள் | | |
|---|---|---|
| 1.இன்றியமையாத பண்டங்கள் | 2.வசதிப் பண்டங்கள் | 3.ஆடம்பரப் பண்டங்கள் |

**குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி:**


**இலக்கணம்:**

ஒருவரிம் உள்ள ஒரு பண்டத்தில் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகில் இருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது. -மார்ஷல்



Downloaded From www.nagaicollege.com

**வரைபடம்:**




**வரைபட விளக்கம்:**

- ஒரு நுகர்வோர் 7 ஆப்பிள்களை ஒன்றன்பின் ஒன்றாக நுகர விரும்புகிறார்.
- **முதல் ஆப்பிளில்** இருந்து பெற்ற பயன்பாடு 20 அலகுகள்.
- **இரண்டாவது** ஆப்பிள் பயன்பாடு முதல் ஆப்பிளை விட குறைவு (15 அலகுகள்).
- **மூன்றாவது** ஆப்பிள் பயன்பாடு இரண்டாவதை விட குறைவு (10 அலகுகள்).
- **ஐந்தாவது** ஆப்பிளில் பெற்ற பயன்பாடு பூஜ்ஜியம் ஆகும்.
- **ஆறாவது, ஏழாவது** நுகரும்போது அவர் பெறுவது எதிர்மறைப் பயன்பாடாகும்.
- இந்தப் போக்கை கூறுவதே குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி ஆகும்.

R.THALAMPOORAJAN

விதியின் மூலம் ஒரு நுகர்வோர் ஒரே பண்டத்தை தொடர்ந்து கால இடைவெளியின்றி தொடர்ச்சியாக நுகரும் போது ஒவ்வொரு கூடுதல் பொருளிலிருந்து கிடைக்கிற பயன்பாடு குறைந்து செல்லும் என்பது தெரிய வருகிறது.

இது 'காசனின் முதல் நுகர்வு விதி' என்றும் அழைக்கப்படுகிறது.

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

அட்டவணை மற்றும் வரைபடத்தை மீண்டும் வரையச் செய்தல்.

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**மதிப்பீட்டு வினாக்கள்:**

1.பயன்பாட்டை வரையறு 2.விருப்பங்களை வகைப்படுத்து

3.மனித விருப்பங்களின் இயல்புகளைக் கூறு. 4.கொள் குறிவகை வினாக்கள்

5.மொத்தப் பயன்பாடு இறுதிநிலைப் பயன்பாடு உறவு விளக்குக.



Downloaded From www.nagaicollege.com

## பாடக்குறிப்பு - பொருளியல்

**நாள்** :

**வகுப்பு** : 11

**அத்தியாயம்** : 2 (பகுதி -2)

**பாடம்** : நுகர்வுப் பகுப்பாய்வு

**தலைப்பு** : **சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி - நுகர்வோர் எச்சம் - தேவை விதி**

**துணைக் கருவிகள்:** வரைபடம், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**கற்றல் நோக்கங்கள்:**

1.விலையில் மாற்றங்கள் நிகழும் போது நுகர்வோரின் போக்கினைப் புரிதல். 2.பண்டத்தை வாங்கும் மற்றும் நுகரும் நடத்தை பற்றி அறிந்து கொள்ளுதல்.

**ஆயத்தப்படுத்துதல்:**

1.பதிலீடு என்றால் என்ன?

2.உச்சபட்ச திருப்தி என்றால் என்ன?

R.THALAMPOORAJAN

3.உபரி என்பதன் பொருள் யாது?

4.விலை மற்றும் தேவை என்றால் என்ன?

வினாக்களின் மூலம் மாணவர்களிடம் விடைகளைப் பெறுதல்

**<u>கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:</u>**

**சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி:**

**வரையறை:**

"ஒரு மனிதன் பல வகையிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளைப் பெற்றிருந்தால், அதன் பலவகைப் பயன்களிடையே பகிர்ந்தளிக்கும் போது அதன் பயன்களின் இறுதிநிலைப் பயன்பாடு ஒரே அளவில் சமமாக இருக்கும்படி பகிர்ந்தளிப்பான். ஒன்றை விட மற்றொன்றில் அதிக இறுதிநிலை பயன்பாடு கிடைக்குமெனில் அவர் அதிகப் பயன்பெறும் நோக்கில் குறைந்த பயன் தரும் பொருளில் இருந்து அதிக பயன் தரும் பொருளுக்கு மாறிவிடுவார். - மார்ஷல்


www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**வரைபடம்:**





**வரைபட விளக்கம்:**

நுகர்வோர் ஆப்பிளுக்காக ₹10ம் ஆரஞ்சுக்காக ₹4ம் செலவிடுகிறார் எனக் கொண்டால், இரண்டின் இறுதிநிலை பயன்பாடும் சமமாக இருக்கும். ஆகவே அவர் உச்ச பயன்பாட்டினை பெறுகிறார்.

**நுகர்வோர் உபரி:**

வரையறை: "ஒரு பொருளை வாங்காமல் இருப்பதை விட, வாங்குவதே மேல் என முடிவு செய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம் எனப்படும். - மார்ஷல்

**வரைபடம்:**




MPOORAJAN
www.Padasalai.Net

**வரைபட விளக்கம்:**

நுகர்வோர் எச்சம் = ODCQ - OPCQ = PDC (நிழலிட்ட பகுதி)


**தேவை விதி:**

**வரையறை:**

'விலை குறையும்போது தேவையின் அளவு அதிகரிக்கிறது, விலை அதிகரிக்கும் போது தேவையின் அளவு குறைகிறது'. – மார்ஷல்



Downloaded From www.nagaicollege.com




**வரையறை:**


பொருளியலில் ஒரு பொருளுக்கான தேவை என்பது பொருளை வாங்குவதற்கான விருப்பத்தையும், போதிய வாங்கும் சத்தியையும், வாங்கிட வேண்டும் என்ற எண்ணத்தையும் குறிக்கும். ஜே.ஹார்வி

**அட்டவணை:**

| விலை (ரூபாய்) | தேவை அளவு |
|---|---|
| 5 | 1 |
| 4 | 2 |
| 3 | 3 |
| 2 | 4 |
| 1 | 5 |

**வரைபடம்:**

R THALAMPOORAJAN




**வரைபட விளக்கம்:**

வரைபடத்தில் DD என்ற தேவைக்கோடு கீழ்நோக்கி சரிந்து செல்கிறது. அதாவது இடமிருந்து வலமாக கீழ்நோக்கிச் சரிகிறது. இதன் மூலம் விலை குறைந்தால் தேவை விரிவடையும் என்றும் விலை கூடினால் தேவை சுருக்கமடையும் என்றும் அறியலாம்.

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

மாணவர்களை வகுப்பறைகளிலேயே வரைபடப் பயி₹இ அளித்தல்.

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**ஒப்படைப்பு:**

**தேவை விதியை இலக்கணம், அட்டவணை மற்றும் வரைபடம் உதவியுடன் விளக்கி எழுதச் செய்தல்.**

**மதிப்பீட்டு வினாக்கள்:**

1.தேவை விரிவு மற்றும் சுருக்கம் வேறுபடுத்துக.

2.தேவை விதியை வரைபடத்துடன் விவரி.

3.நுகர்வோர் எச்சம் விவரி.

4.கொள்குறிவகை வினாக்கள்.

R.THALAMPOORAJAN



Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : **11**

**அத்தியாயம்** : **3 (பகுதி -1)**

**பாடம்** : **உற்பத்தி பகுப்பாய்வு**

**தலைப்பு** : **உற்பத்தி பொருள்-உற்பத்திக் காரணிகளின் இயல்புகள் - நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு - உற்பத்திச் சார்பு - மாறும் விகித விளைவு விதி- விகித அளவு விளைவு விதி - பொருளாதாரச் சிக்கனங்கள்.**

**துணைக் கருவிகள்**: வரைபடம், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**கற்றல் நோக்கங்கள்**:

1.பல்வேறு உற்பத்தி காரணிகளின் வகைகளையும் மற்றும் அவற்றின் சிறப்பியல்புகளையும் அறிந்து கொள்ளுதல்.


R.THALAMPOORAJAN

2.குறுகிய கால மற்றும் நீண்டகால உற்பத்திச் சார்பினை அறிந்து கொள்ளுதல்.

3.அளிப்பு கருத்தினை அறிந்து கொள்ளுதல்.

கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:

**பாட வளர்ச்சி:**




**<u>உற்பத்தி</u>:**

உற்பத்தி என்பது நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு என்ற நான்கு உற்பத்திக் காரணிகளின் ஒத்துழைப்பால் உருவாவது ஆகும்.

பொருளியலில் உற்பத்தி என்பது புதிதாக உருவாக்குதல் அல்லது மதிப்பை கூட்டுதல் ஆகும்.



Downloaded From www.nagaicollege.com

**நிலம்:**

பொதுவாக நிலமென்பது மண் அல்லது பூமியின் மேற்பரப்பு அல்லது தரைப் பரப்பினைக் குறிக்கும். ஆனால் பொருளியலில் நிலம் என்பது இயற்கையின் கொடையாகும்.

**உழைப்பு:**

பொருளியலில், வருமானத்தையோ வெகுமதியையோ எதிர்பார்த்துச் செய்யும் அனைத்து வேலைகளும் உழைப்பு எனப்படும்.

அந்த வேலை உடல் உழைப்பையோ அறிவினைப் பயன்படுத்தியோ அமையலாம். எடுத்துக்காட்டாக விவசாயி, சமையல்காரர், ரிக்ஷா இழுப்பவர்.

**மூலதனம்:**

மூலதனம் என்பது உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தி காரணி ஆகும்.

**தொழில் அமைப்பு:**

ஒரு தொழிலை ஒருங்கிணைத்து ஏற்று நடத்துபவர் தொழில் அமைப்பாளர் அல்லது தொழில் முனைவோர் ஆவார்.

R.THALAMPOORAJAN

சும்பீட்டரின் கூற்றுப்படி புத்தாக்கத்தைப் பயன்படுத்தி மற்ற உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்து, திட்டமிட்டு, பொருட்களை உற்பத்தி செய்பவரே தொழில் முனைவோர் ஆவர்.

**உற்பத்தி சார்பு:**

பல்வகை உள்ளீடுகளின் அளவுகளுக்கும் வெளியீட்டு பொருட்களின் அளவுகளுக்கும் இடையே உள்ள தொடர்பே உற்பத்தி சார்பு ஆகும்.

**மாறும் விகித விளைவு விதி:**

- ஒரே ஒரு உள்ளீட்டினை மட்டும் அதிகப்படுத்தி, பிற உள்ளீடுகளை மாற்றாமல், உற்பத்தியைப் பெருக்க முயன்றால் மொத்த உற்பத்தி வளர் விகிதத்தில் உயர்ந்து பின்பு குறிப்பிட்ட புள்ளியில் நிலையானபின் குறைந்து செல்லும். இறுதிநிலை உற்பத்தி எதிர்கணியமாக கடைசியில் காணப்படும்.




Downloaded From www.nagaicollege.com

**அட்டவணை**:

| மாறும் உள்ளீடுகளின் அலகுகள் (L) | மொத்த உற்பத்தி ($TP_L$) | இறுதிநிலை உற்பத்தி ($MP_L$) | சராசரி உற்பத்தி ($AP_L$) | நிலைகள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 2 | 2 | I |
| 2 | 6 | 4 | 3 | |
| 3 | 12 | 6 | 4 | |
| 4 | 16 | 4 | 4 | II |
| 5 | 18 | 2 | 3.6 | |
| 6 | 18 | 0 | 3 | III |
| 7 | 16 | -2 | 2.28 | |

**வரைபடம்**:




R.THALAMPOORAJAN

**வரைபட விளக்கம்**:

**முதல் நிலை:**

- முதலில் இறுதிநிலை உற்பத்தி மூன்று உழைப்பாளர்களை பயன்படுத்தும் வரை அதிகரிக்கப்படுகின்றது.

**இரண்டாம்நிலை:**

- இறுதிநிலை உற்பத்தியானது குறைந்து 6 அலகு உழைப்பை பயன்படுத்தும்போது பூஜ்ஜியமாகிறது.

**மூன்றாம் நிலை:**

- 7 அலகு உழைப்பாளர்களை பயன்படுத்தும்போது உழைப்பின் இறுதிநிலை உற்பத்தித் திறன் எதிர் கணியமாகும்.


<u>**விகித அளவு விளைவு விதி**</u>:

- நீண்ட காலத்தில் அனைத்து உற்பத்திக் காரணிகளும் மாறக்கூடியவை. அனைத்து உற்பத்தி காரணிகளும் எண்ணிக்கையில் அதிகரிக்கும்போது வெளியீட்டில் அதிகரிப்பு ஏற்படலாம். இவ்விரண்டிற்கும் உள்ள தொடர்பை விளக்குவதே விகித விளைவு விதி ஆகும்.



Downloaded From www.nagaicollege.com
www.Padasalai.Net

**வரைபடம்:**




### வரைபட விளக்கம்:

- உற்பத்திக் காரணிகளை 4 அலகிலிருந்து 8 அலகுகளாக இரு மடங்கு உயர்த்தியபோதும், அதிகரித்த வெளியீடு உள்ளீட்டின் உயர்வை விட குறைவாகும். அதாவது 33.33 சதவீதம் வெளியீடு கூடியுள்ளது.

**<u>பொருளாதார சிக்கனங்கள்:</u>**

பொருளாதார சிக்கனங்கள் உற்பத்தி செலவைக் குறைக்கின்றன. சிக்கனமின்மைகள் உற்பத்திச் செலவை அதிகரிக்கின்றன.

மார்ஷலின் கூற்றுப்படி பொருளாதார சிக்கனம் இரு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

1.அகச் சிக்கனங்கள் 2.புறச் சிக்கனங்கள்

### வலுவூட்டல்:

R.THALAMPOORAJAN

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

அட்டவணை மற்றும் வரைபடத்தை மீண்டும் வரையச் செய்தல்.

### குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**<u>மதிப்பீட்டு வினாக்கள்:</u>**

1.உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்து. 2.உழைப்பு வரையறு.

3.உற்பத்தி சார்பினைக் குறிப்பிடுக.

4.நிலத்தின் சிறப்பு இயல்புகள் யாவை?

5.தொழில் முனைவோரின் பணிகள் யாவை?

6.மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக.

7.விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.

8.அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.



www.Padasalai.Net
Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 11

**அத்தியாயம்** : 3 (பகுதி -2)

**பாடம்** : உற்பத்தி பகுப்பாய்வு

**தலைப்பு** : **சம அளவு உற்பத்தி கோடுகள் - சம உற்பத்தி செலவு கோடு - உற்பத்தியாளர் சமநிலை - காப் டக்லஸ் உற்பத்தி சார்பு - அளிப்பு விதி.**

**துணைக் கருவிகள்:** வரைபடம், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**கற்றல் நோக்கங்கள்:**

1.பல்வேறு உற்பத்தி காரணிகளின் வகைகளையும் மற்றும் அவற்றின் சிறப்பியல்புகளையும் அறிந்து கொள்ளுதல்.

2.குறுகிய கால மற்றும் நீண்டகால உற்பத்திச் சார்பினை அறிந்து கொள்ளுதல்.

3.அளிப்பு கருத்தினை அறிந்து கொள்ளுதல்.


**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

R.THALAMPOORAJAN

**சம அளவு உற்பத்திக்கோடு: இலக்கணம்:**

"சம அளவு உற்பத்திக் கோடு என்பது அனைத்து சாத்தியமான உற்பத்திக் கலவைகளை பயன்படுத்தி குறிப்பிட்ட பரும அளவு உற்பத்தி வெளியீட்டினை பெறுவதாகும்" என வரையறுக்கிறார். அட்டவணை:

வரைபடம்:




**சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகள்:**

**1.சம உற்பத்திக் கோடுகள் எதிர்மறை சரிவைக் கொண்டவை.**

**2.தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.**

**3. சம உற்பத்திக் கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளாது.**



Downloaded From www.nagaicollege.com

**4.உயர் சம உற்பத்திக் கோடு உயர் உற்பத்தி அளவைக் குறிக்கிறது.**

**5. சம உற்பத்திக் கோடு X அச்சினையோ அல்லது Y அச்சினையோ தொடாது.**

**<u>சம உற்பத்தி செலவு கோடு:</u>**

ஒரு நிறுவனம் குறிப்பிட்ட அளவு பணச் செலவில் வாங்கக்கூடிய இரு காரணிகளின் பல தொகுப்புகளைக் குறிப்பிடுவது சம உற்பத்திச் செலவுக் கோடு ஆகும்.

**<u>உற்பத்தியாளர் சமநிலை:</u>**

உற்பத்தியாளர் சமநிலை என்பது ஒரு குறிப்பிட்ட நிலையில் உற்பத்தியாளர் உச்சபட்ச உற்பத்தியை அடையும் நிலையாகும். இது உற்பத்திக் காரணிகளின் உத்தம அளவு எனவும் அழைக்கப்படுகிறது.

**<u>காப் டக்ளஸ் உற்பத்தி சார்பு:</u>**

காப்-டக்ல்ஸ் உற்பத்தி சார்பு கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றது.

$$Q = AL\alpha\ K\beta$$

இதில், Q = வெளியீடு, A= நேர்மறை நிலை மதிப்பு, K = மூலதனம், L =உழைப்பு

$\alpha$ மற்றும் $\beta$ ஆகியவை நேர்மறை பின்னம் ஆகும்.

**<u>அளிப்பு விதி:</u>**


அளிப்பு விதி ஒரு பொருளின் விலைக்கும் அப்பொருளின் அழிப்பிற்கும் உள்ள நேரடி உறவை விளக்குகிறது.

R.THALAMPOORAJAN

**<u>அட்டவணை:</u>**

| விலை (P) | அளிப்பு ($Q_s$) |
|---|---|
| 1 | 20 |
| 2 | 40 |
| 3 | 60 |
| 4 | 80 |
| 5 | 100 |

**<u>வரைபடம்:</u>**






Downloaded From www.nagaicollege.com

**வரைபட விளக்கம்:**

ஒரு பண்டத்தின் விலை உயர்வால் அளிப்பு அதிகரிக்கும். விலை குறைந்தால் அளிப்பும் குறையும். ஆகவே அளிப்புக் கோடானது கீழிலிருந்து மேல் நோக்கிச் செல்லும்.

X அச்சில் பண்ட அளிப்பின் அளவு, Y அச்சில் விலை.

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

அட்டவணை மற்றும் வரைபடத்தை மீண்டும் வரையச் செய்தல்.

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**மதிப்பீட்டு வினாக்கள்:**

1.சம உற்பத்தி செலவு கோடு என்றால் என்ன?

2.அளிப்புக் கோடு மேல்நோக்கி செல்லும் காரணம் என்ன?

3.உற்பத்தியாளர் சமநிலையை உதாரணத்துடன் விளக்குக.

4.காப் டக்லஸ் உற்பத்தி சார்பினை விளக்குக.

5.சம அளவு உற்பத்திக் கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விளக்குக.

6. கொள் குறிவகை வினாக்கள்.

R.THALAMPOORAJAN
www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 11

**அத்தியாயம்** : 4

**பாடம்** : **செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு**

**தலைப்பு** : **செலவு கருத்துக்கள் - குறுகிய கால செலவு கோடுகள் - நீண்டகாலச் செலவுக் கோடு -வருவாய் கருத்துக்கள்.**

**துணைக் கருவிகள்:** வரைபடம், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**கற்றல் நோக்கங்கள்:**

1.பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்திக்கான செலவுகளையும், அவை பயன்படுத்தப்படும் விதத்தையும், வருவாயுடன் இணைத்து நிறுவனத்தின் இலாபத்தை கணக்கிடுவதையும் பற்றி அறிதல்.

2.பல்வேறு அங்காடியில் பண்டங்கள் மற்றும் பணிகள் விற்பனை செய்வதால் எவ்வாறு வருவாய் வருகிறது என்பதை பற்றி தெரிந்து கொள்ளுதல்.

R.THALAMPOORAJAN

**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

**செலவு:**

செலவுஎன்பது உற்பத்திச் செலவைக் குறிக்கும். ஒரு பொருளை உற்பத்தி செய்யும் போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவினங்கள் உற்பத்தி செலவு ஆகும்.

**செலவு கருத்துக்கள்:**

| | | |
|---|---|---|
| 1.பணச் செலவு | 2.உண்மைச் செலவு | 3.வெளிப்படையான செலவு |
| 4.உள்ளார்ந்த செலவு | 5.பொருளாதாரச் செலவு | 6. சமூகச் செலவு |
| 7.வாய்ப்புச் செலவு | 8.அமிழ்த்தப்பட்ட செலவு | 9.மிதக்கும் செலவு |
| 10.முதன்மைச் செலவு | 11.மாறாச் செலவு | 12.மாறும் செலவு |

**குறுகியகால செலவு கோடுகள்:**

| | |
|---|---|
| 1.மொத்த மாறாச் செலவு | 2. மொத்த மாறும் செலவு |
| 3.மொத்த செலவு வளைகோடு | 4.சராசரி மாறாச் செலவு |
| 5.சராசரி மாறும் செலவு | 6.சராசரி மொத்தச் செலவு |
| 7.இறுதி நிலைச் செலவு | |




Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**<u>நீண்டகால செலவுக்கோடு:</u>**

- நீண்ட காலத்தில் அனைத்து உற்பத்திக் காரணிகளும் மாறக் கூடியவை.
- நீண்ட காலத்தில் ஒரு நிறுவனம் தன் நிறுவன அளவை அதிகரித்துக் கொள்ள முடியும்.
- எனவே நீண்ட காலத்தில் மாறாக் காரணி மற்றும் மாறாச் செலவுகள் இருக்க வாய்ப்பு இல்லை.

**வரைபடம்:**




**<u>வருவாய் கருத்துக்கள்:</u>**

1.மொத்த வருவாய்:

2.சராசரி வருவாய்


3. இறுதிநிலை வருவாய்

R.THALAMPOORAJAN

**மாணவர் செயல்பாடு:**

**செலவு கருத்துக்கள்**

 <u>குறுகியகால செலவு</u>

 <u>நீண்டகால செலவு</u>

செலவுக் கருத்துகளின் வடிவங்களில் உதாரணங்களைத் தேடச் செய்தல்.

**தொடர்பணி:**

**வரைபடங்கள் வரையச் செய்தல்.**

**<u>மதிப்பீட்டு வினாக்கள்:</u>**

1.செலவை வரையறு

2.செலவுச் சார்பை வரையறு.

3.வருவாயை வரையறு

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

4.உண்மைச் செலவு இலக்கணம் தருக.

5.பணச் செலவு உண்மைச் செலவு வேறுபாடுகளைக் கூறுக.

6.இறுதி நிலை வருவாய் பற்றிய குறிப்பு வரைக.

8.நீண்ட கால செலவு  வளைகோட்டை தக்க வரைபடத்துடன் விளக்குக.

9.குறுகியகால செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரி.

10.பல்வேறுபட்ட நிலையில் விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.

R.THALAMPOORAJAN

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 11

**அத்தியாயம்** : 5 (பகுதி -1)

**பாடம்** : **அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும்**

**தலைப்பு: அங்காடியின் பொருள் - அங்காடியின் வகைகள் - நிறைவுப் போட்டி**

**துணைக் கருவிகள்:** வரைபடம், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**கற்றல் நோக்கங்கள்:**

1.அங்காடியின் பண்புகளையும், பல்வேறு வகையான அங்காடியில் விலை மற்றும் வெளியீடு எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதையும் பற்றி அறிந்து கொள்ளுதல்.


2.பல்வேறு வகையான அங்காடிகளில் நிறுவனங்களின் இலாபத்தின் தன்மை பற்றி படிப்பது.

**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

அங்காடி என்பது பொருள்கள் மற்றும் பணிகளை வாங்குதல் மற்றும் விற்பனை செய்யும் இடத்தை குறிக்கும்.

R.THALAMPOORAJAN

**பாட வளர்ச்சி:**




**அங்காடியின் வகைகள்:**

**1.இடத்தின் அடிப்படையில்:**

அ) உள்ளூர் அங்காடி ஆ) மாகாண அங்காடி இ) தேசிய அங்காடி ஈ) பன்னாட்டு அங்காடி

**2.காலத்தின் அடிப்படையில்:**

அ) மிகக் குறுகிய காலம் அல்லது அங்காடி காலம் ஆ)குறுகிய கால அங்காடி

இ) நீண்ட கால அங்காடி ஈ)மிக நீண்ட காலம்

**3. பண்டத்தின் அளவின் அடிப்படையில்:**

அ).மொத்த விற்பனை அங்காடி ஆ).சில்லறை அங்காடி

**4.போட்டியின் அடிப்படையில்:**

அ) நிறைவுப் போட்டி அங்காடி ஆ) நிறை குறைப் போட்டி அங்காடி

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**<u>நிறைவு போட்டி:</u>** **இலக்கணம்:**

ஜோன் ராபின்சன் "ஒவ்வொரு உற்பத்தியாளரின் உற்பத்தியும் முழு நெகழ்ச்சியுடைய தேவையைக் கொண்டிருக்கும் நிலையையே நிறைவு போட்டி" என்று குறிப்பிடுகிறார்.

**இயல்புகள்:**

1.எண்ணற்ற வாங்குபவர் மற்றும் விற்போர்

2.ஓரியல்பான பண்டங்கள் மற்றும் ஒரே மாதிரியான விலை

3.உட்புகுதல் மற்றும் வெளியேறுதலில் தடை இல்லை


4 போக்குவரத்து செலவு இல்லை

5.உற்பத்தி காரணிகள் இடம் பெயரும்

6.அங்காடி நிலை பற்றி அறிந்திருப்பர்

7.அரசின் தலையீடு இல்லை

**வரைபடம்:**




**வரைபட விளக்கம்:**

**வரைபடம் 1:**

முதல் பகுதியில் அனைத்து நிறுவனங்களின் தேவை மற்றும் அளிப்பு சக்திகள் சந்திக்கின்றன. இதில் நிலையான விலையாக ₹10 நிர்ணயிக்கப்படுகிறது. தொழிற்சாலையின் சமநிலை உற்பத்தி 50 அலகுகள் ஆகும்.

**வரைபடம் 2:**

இரண்டாம் பகுதி வரைபடத்தில் AC கோடு, விலைக்கோட்டை விட குறைவாக உள்ளது. MC = MR நிலையில் சமநிலை அடைகிறது. சமநிலையில் உற்பத்தி அலகு 50 ஆகவும், விலை ₹10 ஆகவும், சராசரி செலவு ₹8 ஆகவும், சராசரி வருவாய் ₹10 ஆகவும் உள்ளது. உற்பத்தி பண்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் நிறுவனம் மிகை இலாபம் அடைகிறது.

**வரைபடம் 3:**

மூன்றாம் பகுதி வரைபடத்தில் நிறுவனத்தின் செலவுக்கோடு விலைக்கோட்டிற்கு மேலே உள்ளது. சமநிலைக்கான நிபந்தனை MC = MR ஆக உள்ள போது நிறைவடைகிறது. ஏற்கெனவே உள்ள அதே விலையில் (₹10) 50 பண்டங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அப்போது நிறுவனம் நட்டம் அடைகிறது (AC > AR).



Downloaded From www.nagaicollege.com

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**செயல்பாடு/தொடர்பணி:**

**1. நிறைவு போட்டி வரைபடம் வரைந்து வரச் செய்தல்.**
**2. அங்காடி நிலை பற்றி அறியச் செய்தல்.**

**மதிப்பீட்டு வினாக்கள்:**

1.அங்காடி வரையறு.

2.விற்பனை செலவு என்றால் என்ன?

3.அங்காடியின் இயல்புகள் யாவை?

4.விற்பனை செலவு என்றால்? உதாரணத்துடன் விளக்குக.

5.நிறைவு போட்டியின் இயல்புகளை விளக்குக.

6.கொள் குறிவகை வினாக்கள்.

R.THALAMPOORAJAN
www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 11

**அத்தியாயம்** : 5 (பகுதி -2)

**பாடம்** : **அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும்**

**தலைப்பு** : **முற்றுரிமை - பண்புகள் - முற்றுரிமையில் விலை பேதம் - முற்றுரிமை போட்டியின் விலை மற்றும் உற்பத்தி நிர்ணயம் - இருவர் முற்றுரிமை - சில்லோர் முற்றுரிமை**

**துணைக் கருவிகள்:** வரைபடம், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**கற்றல் நோக்கங்கள்:**

1.அங்காடியின் பண்புகளையும், பல்வேறு வகையான அங்காடியில் விலை மற்றும் வெளியீடு எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதையும் பற்றி அறிந்து கொள்ளுதல்.

2.பல்வேறு வகையான அங்காடிகளில் நிறுவனங்களின் இலாபத்தின் தன்மை பற்றி படிப்பது.

**ஆயத்தப்படுத்துதல்:**

R.THALAMPOORAJAN

1.அங்காடிப் போட்டிகளைக் கூறுதல்.

2.அங்காடியில் விற்பனையாகும் பொருட்களின் விலைகளைக் கேட்டறிதல்.

3.அங்காடியில் எவ்வகையான பொருட்கள் உள்ளது என வினாவுதல்.

4.குளியல் சோப்பு போன்ற ஒரே மாதிரியான பொருட்களை வகையறிதல்.

**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

**முற்றுரிமை:**

முற்றுரிமை என்பது ஒரு பண்டத்தை அங்காடியில் ஒருவரே விற்பனை செய்வதாகும். ஆகவே போட்டிக்கான வாய்ப்பு இல்லை.

**பண்புகள்:**

1.ஒரே ஒரு உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்.

2.பொதுவாக நிறுவனங்கள் உள்ளே நுழைய தடை உள்ளது.


3.முற்றுமையாளர் விலையை நிர்ணயிப்பவர்.

**முற்றுரிமை போட்டி:** முற்றுரிமை போட்டியில் பல நிறுவனங்கள் வேறுபடுத்தப்பட்ட பண்டங்களை உற்பத்தி செய்து விற்பார்கள். ஒரே உபயோத்திற்கான பண்டங்களை தயாரிக்கும் நிறுவனங்களிடைய போட்டி நிலவும். ஆனால் நிறை குறையாக இருக்கும்.



Downloaded From www.nagaicollege.com

**வரைபடம்:**




**வரைபட விளக்கம்:**

ஒரு முற்றுரிமையாளர் இறுதிநிலைச் செலவைவிட இறுதிநிலை வருவாய் அதிகமாக இருக்கும் வரை (MR > MC) தொடர்ந்து உற்பத்தி செய்து விற்கின்றார்.

அவரது சமநிலை உற்பத்தியானது MC = MR.

இந்த புள்ளிக்கு மேல் உற்பத்தியாளர் தனக்கு நட்டம் ஏற்படும் என்பதை எதிர்பார்த்து விற்பனையை நிறுத்திக் கொள்வார்.

**<u>இருவர் முற்றுரிமை:</u>**

- இந்த வகை அங்காடி தனிப்பட்ட இரு விற்பனையாளர்களைக் கொண்டுள்ளது. இரண்டு விற்பனையாளரும் தனித்து செயல்படுவதுடன் அவர்களுக்கு எவ்விதமான ஒப்பந்தமும் கிடையாது என அனுமானிக்கப்படுகிறது.

**இருவர் முற்றுரிமையின் இயல்புகள்:**

R.THALAMPOORAJAN

- 1.ஒவ்வொரு விற்பனையாளரும் போட்டியாளரின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளை முழுமையாக அறிந்திருப்பர்.
- 2.இரண்டு விற்பனையாளரும் உடன்பாடு செய்திருப்பர்.
- 3.அவர்கள் முறையற்ற மிக்க கடினமான போட்டியில் ஈடுபடலாம்.
- 4.உற்பத்தி பண்டங்களில் வேறுபாடு இல்லை.
- 5.அவர்கள் தங்கள் உற்பத்தி பண்டத்திற்கு நிர்ணயிக்கும் விலை அதிக இலாபம் பெறுவதற்காகவே இருக்கும்.

**<u>சில்லோர் முற்றுரிமை:</u>**

**சில்லோர் முற்றுரிமையின் இயல்புகள்:**

**1.சில பெரிய நிறுவனங்கள்:**

- சில பெரிய நிறுவனங்களே அங்காடி முழுவதிலும் உற்பத்தி மற்றும் தேவையைக் கட்டுப்படுத்தும்.

**2.நிறுவனங்களுக்குள் சார்ந்திருத்தல்:**

- ஒரு நிறுவனத்தின் விலை மற்றும் உற்பத்தி அளவை நிர்ணயிக்கும் முடிவுகள் போட்டி நிறுவனம் எடுக்கும் முடிவுகளைச் சார்ந்து அமையும்.

**3.குழுச் செயல்பாடு:**

- சில்லோர் முற்றுரிமை நிறுவனங்கள் அனைத்தும் தமக்குள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கும்.

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**4.விளம்பரச் செலவு:**

- சில்லோர் முற்றுரிமையாளர், விளம்பரம் அல்லது உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தி தனது விற்பனையை அதிகரிப்பர்.

**5.பண்டத்தின் தன்மை:**

- சில்லோர் முற்றுரிமை என்பது ஒரே விதமான பொருள் உற்பத்தி செய்வதையும், நிறைகுறை சில்லோர் உற்பத்தி என்பது பலவிதமான பொருட்கள் உற்பத்தி செய்வதையும் குறிக்கும்.

**6.மாறாத விலை:**

- விலையை மாற்றி அமைப்பது என்பது இந்த அங்காடியில் கடினம் ஆகும். சில்லோர் முற்றுரிமையில் விலையை மாற்றாமல் இருப்பதற்கு காரணம் எதிராளிகளின் போட்டி பற்றிய அம்சமாகும்.

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

அட்டவணை மற்றும் வரைபடத்தை மீண்டும் வரையச் செய்தல்.

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**தொடர்பணி:**

R.THALAMPOORAJAN

ஒரே மாதிரியான மற்றும் வெவ்வேறு வகையான பண்டங்களின் விலைகளை அறிந்து முற்றுரிமை மற்றும் முற்றுரிமைப் போட்டியினை அடையாளம் காணுதல்.

**மதிப்பீட்டு வினாக்கள்**:

1.விலை பேதம் காட்டுதலின் இரண்டு தன்மைகளை கூறுக.

2.நிறைவு போட்டி மற்றும் முற்றுரிமை போட்டியின் ஒற்றுமையை விளக்குக.

3.நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

4.முற்றுமையில் விலை மற்றும் உற்பத்தி அளவை தீர்மானிப்பதை விளக்குக.

5.சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.

6.கொள்குறிவகை வினாக்கள்.



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : **11**

**அத்தியாயம்** : **5 (பகுதி -2)**

**பாடம்** : **அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும்**

**தலைப்பு** : **முற்றுரிமை - பண்புகள் - முற்றுரிமையில் விலை பேதம் - முற்றுரிமை போட்டியின் விலை மற்றும் உற்பத்தி நிர்ணயம் - இருவர் முற்றுரிமை - சில்லோர் முற்றுரிமை**

**துணைக் கருவிகள்:** வரைபடம், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**<u>கற்றல் நோக்கங்கள்:</u>**

1.அங்காடியின் பண்புகளையும், பல்வேறு வகையான அங்காடியில் விலை மற்றும் வெளியீடு எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதையும் பற்றி அறிந்து கொள்ளுதல்.

2.பல்வேறு வகையான அங்காடிகளில் நிறுவனங்களின் இலாபத்தின் தன்மை பற்றி படிப்பது.

**ஆயத்தப்படுத்துதல்:**

1.அங்காடிப் போட்டிகளைக் கூறுதல்.

2.அங்காடியில் விற்பனையாகும் பொருட்களின் விலைகளைக் கேட்டறிதல்.

3.அங்காடியில் எவ்வகையான பொருட்கள் உள்ளது என வினாவுதல்.

4.குளியல் சோப்பு போன்ற ஒரே மாதிரியான பொருட்களை வகையறிதல்.

**<u>கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:</u>**

**<u>முற்றுரிமை:</u>**

முற்றுரிமை என்பது ஒரு பண்டத்தை அங்காடியில் ஒருவரே விற்பனை செய்வதாகும். ஆகவே போட்டிக்கான வாய்ப்பு இல்லை.

**பண்புகள்:**

1.ஒரே ஒரு உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்.

2.பொதுவாக நிறுவனங்கள் உள்ளே நுழைய தடை உள்ளது.


3.முற்றுமையாளர் விலையை நிர்ணயிப்பவர்.

**<u>முற்றுரிமை போட்டி:</u>** முற்றுரிமை போட்டியில் பல நிறுவனங்கள் வேறுபடுத்தப்பட்ட பண்டங்களை உற்பத்தி செய்து விற்பார்கள். ஒரே உபயோத்திற்கான பண்டங்களை தயாரிக்கும் நிறுவனங்களிடைய போட்டி நிலவும். ஆனால் நிறை குறையாக இருக்கும்.



R.THALAMPOORAJAN
www.Padasalai.Net
Downloaded From www.nagaicollege.com

**வரைபடம்:**




**வரைபட விளக்கம்:**

ஒரு முற்றுரிமையாளர் இறுதிநிலைச் செலவைவிட இறுதிநிலை வருவாய் அதிகமாக இருக்கும் வரை (MR > MC) தொடர்ந்து உற்பத்தி செய்து விற்கின்றார்.

அவரது சமநிலை உற்பத்தியானது MC = MR.

இந்த புள்ளிக்கு மேல் உற்பத்தியாளர் தனக்கு நட்டம் ஏற்படும் என்பதை எதிர்பார்த்து விற்பனையை நிறுத்திக் கொள்வார்.

**<u>இருவர் முற்றுரிமை:</u>**

- இந்த வகை அங்காடி தனிப்பட்ட இரு விற்பனையாளர்களைக் கொண்டுள்ளது. இரண்டு விற்பனையாளரும் தனித்து செயல்படுவதுடன் அவர்களுக்கு எவ்விதமான ஒப்பந்தமும் கிடையாது என அனுமானிக்கப்படுகிறது.

**இருவர் முற்றுரிமையின் இயல்புகள்:**

R.THALAMPOORAJAN

- 1.ஒவ்வொரு விற்பனையாளரும் போட்டியாளரின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளை முழுமையாக அறிந்திருப்பர்.
- 2.இரண்டு விற்பனையாளரும் உடன்பாடு செய்திருப்பர்.
- 3.அவர்கள் முறையற்ற மிக்க கடினமான போட்டியில் ஈடுபடலாம்.
- 4.உற்பத்தி பண்டங்களில் வேறுபாடு இல்லை.
- 5.அவர்கள் தங்கள் உற்பத்தி பண்டத்திற்கு நிர்ணயிக்கும் விலை அதிக இலாபம் பெறுவதற்காகவே இருக்கும்.

**<u>சில்லோர் முற்றுரிமை:</u>**

**சில்லோர் முற்றுரிமையின் இயல்புகள்:**

**1.சில பெரிய நிறுவனங்கள்:**

- சில பெரிய நிறுவனங்களே அங்காடி முழுவதிலும் உற்பத்தி மற்றும் தேவையைக் கட்டுப்படுத்தும்.

**2.நிறுவனங்களுக்குள் சார்ந்திருத்தல்:**

- ஒரு நிறுவனத்தின் விலை மற்றும் உற்பத்தி அளவை நிர்ணயிக்கும் முடிவுகள் போட்டி நிறுவனம் எடுக்கும் முடிவுகளைச் சார்ந்து அமையும்.

**3.குழுச் செயல்பாடு:**

- சில்லோர் முற்றுரிமை நிறுவனங்கள் அனைத்தும் தமக்குள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கும்.



Downloaded From www.nagaicollege.com

**4.விளம்பரச் செலவு:**

- சில்லோர் முற்றுரிமையாளர், விளம்பரம் அல்லது உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தி தனது விற்பனையை அதிகரிப்பர்.

**5.பண்டத்தின் தன்மை:**

- சில்லோர் முற்றுரிமை என்பது ஒரே விதமான பொருள் உற்பத்தி செய்வதையும், நிறைகுறை சில்லோர் உற்பத்தி என்பது பலவிதமான பொருட்கள் உற்பத்தி செய்வதையும் குறிக்கும்.

**6.மாறாத விலை:**

- விலையை மாற்றி அமைப்பது என்பது இந்த அங்காடியில் கடினம் ஆகும். சில்லோர் முற்றுரிமையில் விலையை மாற்றாமல் இருப்பதற்கு காரணம் எதிராளிகளின் போட்டி பற்றிய அம்சமாகும்.

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

அட்டவணை மற்றும் வரைபடத்தை மீண்டும் வரையச் செய்தல்.

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**தொடர்பணி:**

R.THALAMPOORAJAN

ஒரே மாதிரியான மற்றும் வெவ்வேறு வகையான பண்டங்களின் விலைகளை அறிந்து முற்றுரிமை மற்றும் முற்றுரிமைப் போட்டியினை அடையாளம் காணுதல்.

**மதிப்பீட்டு வினாக்கள்**:

1.விலை பேதம் காட்டுதலின் இரண்டு தன்மைகளை கூறுக.

2.நிறைவு போட்டி மற்றும் முற்றுரிமை போட்டியின் ஒற்றுமையை விளக்குக.

3.நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

4.முற்றுமையில் விலை மற்றும் உற்பத்தி அளவை தீர்மானிப்பதை விளக்குக.

5.சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.

6.கொள்குறிவகை வினாக்கள்.



Downloaded From www.nagaicollege.com